04.08.2026

DW1- திரு. சுந்தரபாண்டியன்

O.S No.631/2021

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.)

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1ம் பிரதிவாதி எனது மனைவி ஆவார். நான் இரயில்வே துறையில் பணிபுரிந்து பணிஓய்வு பெற்றுவிட்டேன். தாவா சொத்து விபரத்தை பற்றி எனக்கு அனைத்து விபரங்களும் தெரியும். தாவா சொத்து ராமநாதனிடம் எனது மனைவி கிரையம் பெற்றார். தாவா சொத்தை கிரையம் பெறும் சமயத்தில் நான், முந்தைய ஆவணங்களையும் 33 ஆண்டுகளுக்கான வில்லங்கத்தையும் சரிபார்த்து தான் கிரையம் பெற்றேன். தாவா சொத்து 1926 லேயே வாதி கோவிலுக்கு கிரையம் கொடுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் எனக்கு தெரியவந்தது. தாவா சொத்து வடகாசியம்மாள், கோவிலுக்கு தானம் கொடுத்த விபரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால் வடகாசியம்மாள் உத்தரவின்பேரில் சமயமூப்பன் வகையறா எஸ்டேட் மேனஜருக்கு, அர்த்தஜாமகட்டளை மற்றும் திருவனந்தள் கட்டளை ஆகியவை செய்வதற்காக எழுதிக்கொடுத்ததை தெரிந்துகொண்டேன். அந்த ஆவணத்தின்படி மொத்தமாக 16 ஏக்கர் 42 செண்ட் எழுதிக்கொடுக்கப்பட்டவிபரம் எனக்கு தெரியுமா என்றால் சரியான விஸ்தீரணம் தெரியாது. ஆனால் அது அதிகப்பரப்பளவு கொண்டது. வாதிகோவில் பெயரில் பட்டா இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் நீதிமன்றத்தில் இருந்து வழக்கு நோட்டீஸ் வரை எனக்கு தெரியாது. எனது மனைவி 16.12.2019ம் தேதி தாவா சொத்தை கிரையம் பெற்றார்.

நான் 1972 ல் ஆண்டுமுதல் தான் வில்லங்கம் பார்த்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்னாள் உள்ள வில்லங்கத்தை பார்த்தால் அது கோவில் பெயரில் இருப்பது தெரியவந்திருக்கும் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்து வருவாய் ஆவணங்களில் அவ்வாறு இல்லை.

2. வாதி கோவில் சிவகங்கை சமஸ்தானத்திற்கு கீழ் கட்டுப்பட்ட கோவில் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்தபின்னர் தான் தெரியும். தேவஸ்தான மேலாளருக்கு வழக்கு நடத்த உரிமை வழங்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அதுபோல் ஒரு தீர்மானம் இல்லை. வா.சா.ஆ.2 படி 23.12.2020 ல் தீர்மானம் ஏற்றப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 திட்டத்தின்படி உயர்நீதிமன்றத்தால் கோவில் பரம்பரை அறங்காவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு கொடுத்த திட்டநகலில் அவ்வாறு இல்லை. அந்த திட்டத்தில் கோவில் பெயர் வரிசை எண் 83ல் உள்ளது என்றால் கோவில் அவர்கள் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. ஆனால் கட்டளைகள் தனியாக உள்ள பட்டியலில் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தின்படி பட்டா 1930 ல்இருந்து வாதி கோவில்பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நாங்கள் வாங்கும் காலத்தில் எங்களுக்கு கிரையம் கொடுத்தவர்கள் மற்றும் அவர்கள் முன் பாத்தியஸ்தர்கள் பெயரில் தான் இருந்தது. நாங்கள் கோவில் சொத்தை கிரையம் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல. நாங்கள் பட்டாதாரர்களிடம் இருந்து தான் கிரையம் பெற்றோம். எனக்கு கிரையம் கொடுத்த நபர்கள் ராஜேந்திரன், ஏடகநாதன் ஆகியோரிடம் இருந்து கிரையம் பெற்றிருந்தார்கள். அவர்களுக்கு எவ்வாறு சொத்து பாத்தியப்பட்டிருந்தது என்றால் அவர்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்டு அந்த

சொத்துக்களை பாகம் செய்ததாக ஆவணத்தை காட்டினார்கள் பார்த்தோம். வடகாசியம்மாளின் மகன் தான் சொக்கன் செட்டியார் என்பதை வழக்கு தாக்கல் செய்தபின்னர் தான் தெரிந்து கொண்டேன். 1938 ல் அந்த ஆவணத்தை வடகாசியம்மாளும், சொக்கன் செட்டியாரும் ரத்து செய்ததாக தெரிந்துகொண்டேன். அந்த ரத்து பத்திரத்தை ஆவணமாக கொடுத்துள்ளேன். தற்போது என்னிடம்காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ரத்து பத்திரத்தில் வடகாசியம்மாள் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் வாசகத்தில் நானும், தாயாரும் என உள்ளது. கோவிலுக்கு எழுதிக்கொடுத்த சொத்துக்களை பொறுத்து எழுதிக்கொடுத்த அந்த ஆவணத்தை ரத்துசெய்ய இயலாது என்றால் சரியல்ல. கோவிலுக்கு நேரடியாக எழுதி தரவில்லை. மேலும் அது தான பத்திரம் என்பதால் ரத்து செய்யலாம்.

தாவா சொத்தில் உழவடை இருந்ததா என்றால் இருந்தது. உழவடை விடுதலை ஆவணமும் ராஜேந்திரனும், ஏடகநாதனும் பெற்று இருந்தார்கள். நான் எனது வழக்குரையில் தாவாசொத்து கோவில் சொத்து என நாளிதழ் அறிவிப்போ, பதிவாளரிடம் ஆட்சேபனையோ நான் கிரையம் பெறும் சமயத்தில் கொடுத்திருந்தால் சொத்தை கிரையம் பெற்றிருக்கமாட்டேன் என குறிப்பிட்யிருந்தேனா என்றால் ஞாபகம் இல்லை. சட்டப்படி கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் நான் கிரையம் பெற்றது செல்லாது என்றும் அந்த சொத்திற்கு முன்பாத்தியஸ்தர்கள் பெயரில் பட்டா மாறுதல்களும் செல்லாது என்றால் சரியல்ல. என் மனைவி பெயரில் தற்போது வரை பட்டா மாறுதல் பெறவில்லை என்றால் சரியல்ல. பட்டா எண் 723 ஆகும். அளந்து பார்த்து தான் கிரையம் பெற்றேன். கோவிலுக்கு பாத்தியமான புல எண்

35/2பி ல் எவ்வளவு சதுரடி உள்ளது என்பதை பிரித்து நான் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் புல எண் 35/3 ல் நான் கிரையம் பெறவில்லை எனவும், 35/2பில் தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் சார்பு நீதிபதி,
மதுரை